RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 43 | பிப்ரவரி.19 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சியாக மத்திய அரசு இருக்க வேண்டும் முதல்வர் ஸ்டாலின்

சென்னை: பிப்.19-

"அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சியாக ஒன்றிய அரசு இருக்க வேண்டும். கூட்டாட்சிக்கு முக்கியத்துவம் தரும் வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டும். மத்திய அரசும் மாநில அரசும் போட்டியாளர்கள் அல்ல. இருவரும் பொது அமைப்பின் பங்குதாரர்கள்," என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

2026 ஜ் 2027 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட்டை நேற்று அமைச்சர் தங்கம் தென்னரசு சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார். இதையடுத்து வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார்.

இதன் தொடர்ச்சியாக, தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால பட்ஜெட் மீதான விவாதம், இன்று சட்டப்பேரவையில் நடைபெற்றது. அப்போது முதல்வர் ஸ்டாலின் பேசும்போது, "முன்னாள் முதல்வர் அண்ணா, தனது இறுதி உயிர் போல எழுதியது தான் மாநில சுயாட்சி கொள்கை. அவரது மறைவுக்குப் பிறகு மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்பதை ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றாக கருணாநிதி வடிவமைத்து கொடுத்தார்.

மத்திய மாநில அரசுகளின் உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் அறிக்கையின் முதல் பகுதியை சட்டப்பேரவையில் வைக்க இருக்கிறோம். ஒன்றிய அரசிடம் இருந்து உரிமைகளை பெற இன்னமும் போராடும் நிலை உள்ளது; எல்லாவற்றுக்கும் மாநில அரசுகள் ஒன்றியத்தின் தயவை எதிர்பார்த்துள்ள நிலைதான் உள்ளது.

அனைத்து அதிகாரங்களையும் தன்வசம் வைத்துள்ள மத்திய அரசு மாநில அரசுகளை மதிப்பது இல்லை. இன்னும் எத்தனை காலங்கள் அவர்கள் கொடுக்கும் இடத்திலும்,



நாம் வாங்கும் இடத்திலும் இருப்பது. அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சியாக ஒன்றிய அரசு இருக்க வேண்டும். கூட்டாட்சிக்கு முக்கியத்துவம் தரும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டும்.

மாநில சுயாட்சி வேண்டும், மத்தியில் கூட்டாட்சி மலர வேண்டும். இது தனிப்பட்ட அரசியல் கட்சியின் கோரிக்கை அல்ல, இந்திய மக்களின் வாழ்வியல் கோரிக்கை. பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவுக்கு கூட்டாட்சி தான் அடிப்படை. இதைத் தான் அந்த அறிக்கையும் நிறுவுகிறது. எனவே, இத்தகைய தன்மை கொண்டதாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும்.

கடந்த 76 ஆண்டுகளில் 106 முறை இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. எனவே, நாம் முயன்றால் மீண்டும் திருத்த முடியும். இந்தியாவை முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடாக மாற்றும் முயற்சியைத் தொடங்க வேண்டும். அதிகாரமும் வாய்ப்புகளும் ஒரே இடத்தில் குவிந்திருக்கக் கூடாது, பரவலாக வேண்டும். கூட்டாட்சி தன்மை கொண்டதாக இந்திய அரசியலமைப்பை மாற்றுவது மத்திய அரசை பலவீனப்படுத்தாது என்று அறிக்கை கூறுகிறது. ஆளுநர்கள் மூலமாக மாநில அரசுகளை செயல்படவிடாமல் தடுப்பது, ஜி.எஸ்.டி இந்தி திணிப்பு, தொகுதி மறுவரையறை உள்ளிட்ட பல்வேறு வழிகளில் அதிகாரங்களை கபளீகரம் செய்கிறது மத்திய அரசு.

மாநிலங்களவை மற்றும் மக்களவையில் இந்த கொள்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் ஜனநாயக சக்திகள் அதிகமாக இருக்கிறார்கள். எண்ணிக்கையாலும், எண்ணங்களாலும் அதிகமாக இருக்கிறார்கள். நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இந்த அறிக்கை அனுப்பி வைக்கப்படும்.

மத்திய அரசும் மாநில அரசும் போட்டியாளர்கள் அல்ல. இருவரும் பொது அமைப்பின் பங்குதாரர்கள். மாநிலங்கள் வளர்ந்தால்தான் மத்திய அரசு வளரும். மாநில சுயாட்சிக்கான முன்னெடுப்பை நாம்தான் செய்ய வேண்டும். நம்மைவிட்டால் செய்ய யாரும் இல்லை. இது வரலாறு வழங்கி இருக்கும் வாய்ப்பு" இவ்வாறு முதல்வர் பேசினார்.

## "உள்ளாட்சி தேர்தலை நடத்தாத முதல்வர் ஸ்டாலின் 'மாநில சுயாட்சி' பற்றி பேசலாமா?" தமிழிசை தாக்கு

சென்னை: பிப்.19-

'ஓராண்டு காலமாக 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி தேர்தலை நடத்தாமல் உள்ளாட்சிகளுக்கான உரிமையை பறித்த முதல்வர் ஸ்டாலின் இன்று மாநில சுயாட்சியை பற்றி பேசுகிறார்' என பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'ஓராண்டு காலமாக 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி தேர்தலை நடத்தாமல் உள்ளாட்சிகளுக்கான உரிமையை பறித்து மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாமல் அதிகாரிகளை வைத்து நிர்வாகம் செய்து கொண்டிருக்கும் முதல்வர் ஸ்டாலின் இன்று மாநில சுயாட்சியை பற்றி பேசுகிறார்.

தான் ஆளும் தமிழ்நாட்டில் மாநிலத்துக்கு உள்ளாக உள்ள முறையான அதிகார பகிர்வை, அதாவது உள்ளாட்சிகளுக்கு உரிமை கொடுக்க முடியாதவர், எல்லா மாநிலங்களுக்கும் சமமாக தனது நிர்வாகத்தை எந்த பாராபட்சமும் இல்லாமல் நடத்திக் கொண்டிருக்கும் மத்திய



அரசை பார்த்து குறை கூறிக் கொண்டிருக்கிறார்.

தேர்தலில் வளர்ச்சியை சொல்லி வாக்கு கேட்க முடியாத திராவிட முன்னேற்ற கழகம், மாநில சுயாட்சி என்று முதலில் கோரிக்கை வைத்து பின்பு தாங்கள் மத்தியில் ஆட்சியில் வரும்பொழுது அதை எல்லாம் மறந்து, இன்று மறுபடியும் தோல்வி பயம் வரும் பொழுது இதைப் போன்ற கோரிக்கைகளை கையில் எடுக்கிறார்கள். திமுகவின் தோல்வி பயத்தையே இது காண்பிக்கிறது' என்று தமிழிசை குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் ஸ்டாலின் பேசியது என்ன?

முன்னதாக, "ஆளுநர்கள் மூலமாக மாநில அரசுகளை செயல்படவிடாமல் தடுப்பது, ஜி.எஸ்.டி இந்தி திணிப்பு, தொகுதி மறுவரையறை உள்ளிட்ட பல்வேறு வழிகளில் அதிகாரங்களை கபளீகரம் செய்கிறது மத்திய அரசு. அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சியாக ஒன்றிய அரசு இருக்க வேண்டும். கூட்டாட்சிக்கு முக்கியத்துவம் தரும் வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டும். மத்திய அரசும் மாநில அரசும் போட்டியாளர்கள் அல்ல. இருவரும் பொது அமைப்பின் பங்குதாரர்கள். மாநிலங்கள் வளர்ந்தால்தான் மத்திய அரசு வளரும். மாநில சுயாட்சிக்கான முன்னெடுப்பை நாம்தான் செய்ய வேண்டும். நம்மைவிட்டால் செய்ய யாரும் இல்லை. இது வரலாறு வழங்கி இருக்கும் வாய்ப்பு" என்று சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் பேசியது குறிப்பிடத்தக்கது.

## "திமுக கூட்டணி கட்சித் தலைவரின் மனைவியே காவல்துறை தாக்குதலுக்கு ஆளாகும் நிலை...!" : இபிஎஸ் கண்டனம்

சென்னை: பிப்.19-

"திமுக கூட்டணி கட்சித் தலைவரின் மனைவியே காவல்துறை தாக்குதலுக்கு ஆளாகும் நிலைதான் இன்று நீடிக்கிறது" என உதவித்தொகை உயர்வு கோரி மாற்றுத் திறனாளிகள் நடத்திய போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை சுட்டிக்காட்டி கண்டித்துள்ளார் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "உதவித்தொகை உயர்வு கோரி மாற்றுத் திறனாளிகள் தொடர்ந்து போராடி வரும் நிலையில், நள்ளிரவில் கைது நடவடிக்கை என்ற பெயரில் திமுக அரசின் காவல்துறை மாற்றுதிறனாளிகள் என்றும் பாராமல், சென்னை முழுவதும் அலைகழித்து , வன்முறைத்



தாக்குதல் நடத்தி அவர்களை கைது செய்ததாக வரும் செய்தி மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது.

காவல்துறையின் ஈவு இரக்கமற்ற தாக்குதலில் மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவரும், திமுக கூட்டணி கட்சியான சிபிஜஎம் மூத்த தலைவர் தோழர் கே. பாலகிருஷ்ணன் மனைவியுமான பா. ஜான்சிராணி படுகாயமைடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வருகின்றன.

திமுக கூட்டணி கட்சித் தலைவரின் மனைவியே காவல்துறை தாக்குதலுக்கு ஆளாகும் நிலைதான் இன்று , முதல்வர் ஸ்டாலின் அரசு அனைத்து விதமான 'கோரிக்கைக் குரல்களை' ஒடுக்கப் நினைப்பதுதான் திமுகவினுடைய பாசிஸ மனோபாவத்துக்கான சான்று.

ஜனநாயக விரோத, பாசிஸப் போக்கைக் கொள்கையாகக் கொண்டு, மாற்றுத் திறனாளிகள் மீது கருணையின்றி நள்ளிரவு முழுவதும் அலைகழித்து , அடிப்படை உரிமைகளை கூட மறுத்து , தாக்குதல் நடத்தியுள்ள திமுக அரசுக்கு எனது கடும் கண்டனம்.

மாற்றுத் திறனாளிகள் மீதான அடக்குமுறை நடவடிக்கைகளை முழுமையாகக் கைவிட வேண்டுமென ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 'விடியல் பயணம்' திட்டத்தில் 881 கோடி முறை பெண்கள் பயணம்: பட்ஜெட்டில் தகவல்

மகளிர் உரிமைத் தொகை திட்டம் மூலம் 1.31 கோடி பெண்களுக்கு மாதம் ரூ.1.000 வழங்கப்பட்டு வருகிறது. இதன் பலனை உணர்ந்து மற்ற மாநிலங்களும் இத்திட்டத்தை பின்பற்றத் தொடங்கியுள்ளன. சமீபத்தில் கோடை காலச் சிறப்புத் தொகையுடன் சேர்த்து ரூ.5000 வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதை பெண்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். 'விடியல் பயணம்' திட்டத்தின் மூலம் இதுவரை 881 கோடி முறை பேருந்துகளில் பெண்கள் கட்டணமின்றி பயணித்துள்ளனர். இதனால் மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ.888 வரை பெண்களால் சேமிக்க முடிகிறது.

இத்தகைய பல்வேறு முயற்சிகள் காரணமாக தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 41 சதவீதம் பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற பெருமையை நாம் அடைந்துள்ளோம். இதுத



விர பெண்கள் பெயரில் சொத்து வாங்குவதை ஊக்குவிக்கும் வகையில், கடந்தாண்டு ஏப்ரல் முதல் சொத்து பதிவுக் கட்டணம் மகளிருக்கு 1 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 3.71 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர். திருநங்கைகள் சுயமாகத் தொழில் செய்வதை ஊக்குவிக்க இந்த அரசு மானியம் வழங்குகிறது. இவ்வாறு பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 32 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற அரசு நடவடிக்கை

தமிழகத்தின் தனித்துவமான விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறும் வகையில், 9 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 32 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வேளாண் இடைக்கால பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து பட்ஜெட் உரையில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த 5 ஆண்டுகளில் தனித்துவமான விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 41 விளைபொருட்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டன. இதில், சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி பலாப்பழம், பண்ருட்டி முந்திரி, விருதுநகர் சம்பா வத்தல், ராமநாதபுரம் சித்திரைக்கார் அரிசி, புளியங்குடி எலுமிச்சை, செட்டிக்குளம் சின்ன வெங்காயம், தூயமல்லி அரிசி, கவுந்தப்பாடி நாட்டுச் சர்க்கரை ஆகிய 9 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 32 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ.20 கோடியில் 47 ஊழியர்களுக்கு கார் பரிசு: 30ம் ஆண்டு விழாவில் ஹைலைட் குழுமம் தாராளம்

கோழிக்கோடு: பிப்.19-

கேரள மாநிலம் கோழிக்கோடில் கடந்த 1996ம் ஆண்டு ஹைலைட் குழுமம் தொடங்கப்பட்டது. இக்குழுமம் கேரளாவின் முதல் ஒழுங்கமைக்கப்பட்ட சில்லறை வணிக மையமான 'ஃபோகஸ் மால்' முதல், கோழிக்கோடு மற்றும் திருச்சூரில் உள்ள பிரம்மாண்டமான 'ஹைலைட் மால்கள்' வரை பல திட்டங்களை கட்டி முடித்துள்ளது.

இந்நிலையில், தனது 30வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் விதமாக, 47 ஊழியர்களின் பணியைப் பாராட்டி ரூ.20 கோடி மதிப்பிலான கார்களைப் பரிசாக வழங்கியுள்ளது. இதில் ரேஞ்ச் ரோவர், ஆடி க்யூ8 மற்றும் லேண்ட் ரோவர் டிஃபென்டர் போன்ற சொகுசு கார்களுடன், டாடா ஹாரியர், கியா செல்டோஸ், ஹூண்டாய் கிரெட்டா மற்றும் ஸ்கோடா கைலாக் உள்ளிட்ட மாடல்களும் அடங்கும்.

தங்கள் ஊழியர்களுக்காகச் செய்யப்பட்டுள்ள இந்த மிகப்பெரிய முதலீடு, நிறுவனத்தின் 'மனிதநேய அணுகுமுறை' மற்றும் ஊழியர்கள் மீதான அர்ப்பணிப்பைக் காட்டுகிறது என்று அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஹைலைட் குழுமத்தின் தலைவர் பி. சுலைமான் கூறும்போது, "கடந்த முப்பது ஆண்டுகளாக, கேரளாவின் உள்கட்டமைப்பைச் சிறந்த முறையில் மேம்படுத்துவதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம்" என்றார்.

## விஜய் முதலில் பரீட்சை எழுதட்டும் பாஸ் பண்றாரான்னு பார்ப்போம் : ஆர்.பி.உதயகுமார் கிண்டல்

மானாமதுரை, பிப்.18-

தேர்தல் களத்திலேயே விஜய் இல்லை, அவருக்கு அனுபவம் போதாது என அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்பி உதயகுமார் கூறினார்.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் அவர் கூறியதாவது: விஜய் முதலில் பரீட்சை எழுதட்டும். மக்கள் என்ன மதிப்பெண் கொடுக்கிறார்கள், அவர் பாஸ் பண்ணுகிறாரா என பார்த்துவிட்டுதான் அவரை விமர்சனம் செய்ய முடியும்.

விஜய்க்கு அனுபவம் போதாது. 41 தொண்டர்கள் இறந்துள்ளனர். ஒவ்வொரு கூட்டத்திலும் உயிர்கள் பலியாகிறது. ஆனால் யார் இறந்தாலும் பரவாயில்லை. தான்தான் முதலமைச்சர் என்று விஜய் பேசுவதை மக்கள் ஏற்க மாட்டார்கள்.

விஜய் களத்தில் இல்லாமலேயே இருப்பதுபோல் காட்டிக்கொள்கிறார். காலமும், மக்களும் அதற்கு தீர்ப்பு வழங்குவார்கள். தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்பது இல்லை. இவ்வாறு கூறினார்.

மாலை தந்தி

வியாழக்கிழமை 19.2.2026



■ கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், பொட்டப்பட்டி கிராமத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் தென்னை சாகுபடி பரப்பு விரிவாக்கத் திட்டத்தின் கீழ் ரூபாய் 12,000 மானிய உதவியுடன் தேவையான இடுபொருட்கள் மற்றும் 110 தென்னங்கன்றுகளை பெற்று நடவு செய்து, ரூபாய் 1,75,000 மானியத்தில் சொட்டு நீர்ப்பாசன அமைப்பை நிறுவி சாகுபடி செய்து வருவதைமாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



■ மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், மணப்பச்சேரி ஊராட்சி எம்.வெள்ளாளபட்டி நடுநிலைப் பள்ளியில் பயிலும் 7 வகுப்பு மாணவ மாணவிகளின் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகள், வாசித்தல்,எழுதுதல் மற்றும் அடிப்படை எண்ணறிவு திறன்கள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் ஆய்வு செய்தார்




## பெரியகுளம் அருகே கள்ளிப்பட்டி அரசு உயர்நிலை பள்ளியில் நாட்டு நலப்பணி திட்டம் முகாமை திரவியம் கல்லூரி தாளாளர் மருத்துவர் பாண்டியராஜன் துவக்கி வைத்தார்

பெரியகுளம், பிப்.19-

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே கள்ளிப்பட்டி அரசினர் உயர்நிலைப்பள்ளியில் திரவியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில் நாட்டு நலப்பணித் திட்டம் துவக்க விழா நடைபெற்றது. திரவியம் கல்லூரி தாளாளர் மருத்துவர் பாண்டியராஜன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நாட்டு நலப்பணி திட்டம் முகாமை துவக்கி வைத்தார்.இந்த நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் ப.சண்முககனி, உதவி தலைமை ஆசிரியர் ரெ. முத்துவேல், ஆசிரியர்கள்,பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள்,திரவியம் கலை மற்றும் அறிவியல் நாட்டு நலப்பணித்திட்ட மாணவிகள்,பள்ளி மாணவ மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தாம்பரத்தில் ரூ.30.16 கோடி மதிப்பில் அரசு புற்றுநோய் நல் ஆதரவு மையம் அமைச்சர் மா.சுப்ரமணியன் திறந்து வைத்தார்

பல்லாவரம், பிப்.19-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் மருத்துவக் கல்லூரி தாம்பரம் வளாகத்தின் கீழ் ரூ.30.16 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள அரசு புற்றுநோய் நல் ஆதரவு மையம் மற்றும் நவீன மருத்துவ உபகரணங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் கலந்து கொண்டு மையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியாளர் டி.சினேகா முன்னிலை வகித்தார். தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ.காமராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



நிகழ்ச்சிக்குப் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மா. சுப்ரமணியன் பேசுகையில், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறுதி கட்டத்தில் இருக்கும் நோயாளிகளுக்கு மனஅதரவு மற்றும் தரமான பராமரிப்பு வழங்கும் நோக்கில் இந்த மையம் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். நோயாளிகள் அமைதியாகவும் மரியாதையுடனும் வாழ்க்கையின் இறுதி காலத்தை எதிர்கொள்ள உதவும் வகையில் இந்த மையம் செயல்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும், இந்த மையம் மூலம் ஆரம்ப நிலையில் புற்றுநோய் கண்டறிதல், மருத்துவ ஆலோசனை, நோயாளி ஆதரவு சேவைகள் மற்றும் நவீன சிகிச்சை உபகரணங்கள் போன்ற அனைத்து வசதிகளும் ஒரே இடத்தில் கிடைக்கவுள்ளதாகவும், தாம்பரம் மற்றும் சுற்றுவட்டார மக்களுக்கு இது பெரும் பயனாக இருக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதில் 4வது மண்டல குழுத் தலைவர் மற்றும் பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் சி.சுரேஷ், டி.ஆர்.கோபி, ரமணி ஆதிமூலம், கழக பேச்சாளர்கள் எஸ்.ஜி.கருணாகர பாண்டியன், கி.வேலுமணி மற்றும் வட்ட, பகுதி நிர்வாகிகள், மருத்துவ நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மண்டையோட்டின் அடிப்பகுதியில் எண்டோஸ்கோபிக் அறுவை சிகிச்சை தமிழ்நாட்டில் முதல் சிறப்பு மாநாடு

மதுரை, பிப்.19-

மண்டையோட்டின் அடிப்பகுதியில் எண்டோஸ்கோபிக் முறையில் மேற்கொள்ளப்படும் நவீன அறுவை சிகிச்சைகள் குறித்த மூன்று நாள் தேசிய அளவிலான சிறப்பு மருத்துவ மாநாடு மதுரையில் நடைபெறுகிறது. மதுரை மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி சார்பில் 'மீனாட்சி நியூரோஎண்டோகான் 2026' என்ற பெயரில் நடைபெறும் இம்மாநாடு, இத்துறையில் தமிழ்நாட்டில் நடைபெறும் முதல் பிரத்யேக மாநாடாகும்.





பிப்ரவரி 20 முதல் 22 வரை நடைபெறும் இம்மாநாடு, மூளை நரம்பியல், நரம்பியல் அறுவை சிகிச்சை மற்றும் காதுமூக்குதொண்டை (ENT) துறையைச் சேர்ந்த இளம் மருத்துவர்களுக்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மண்டையோட்டின் அடிப்பகுதியில் ஆழமாக அமைந்திருக்கும் கட்டிகள் மற்றும் புண்களுக்கு குறைந்த ஊடுருவல் (Minimally Invasive) முறையில் சிகிச்சை அளிக்கும் நவீன நுட்பங்களை அறிமுகப்படுத்துவதே மாநாட்டின் நோக்கமாகும்.

டெல்லி எய்ம்ஸ் உள்ளிட்ட நாட்டின் முன்னணி மருத்துவ நிறுவனங்களைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட மூத்த நிபுணர்கள் கலந்துகொண்டு விரிவுரைகள் வழங்கவுள்ளனர். உடலமைப்பு குறித்த கலந்துரையாடல்கள், நேரடி செய்முறை விளக்கங்கள் மற்றும் இறந்த உடல்களில் மேற்கொள்ளப்படும் 'ஹேண்ட்ஸ்ஆன்' (Cadaveric Workshop) பயிற்சிகளும் இடம்பெறுகின்றன.

மருத்துவமனையின் மூளை நரம்பியல் அறுவை சிகிச்சைத் துறைத் தலைவர் டாக்டர் கே.செல்வமுத்துக்குமரன் கூறுகையில், "மண்டையோட்டினை திறக்காமல் எண்டோஸ்கோப் கருவி மூலம் மூளையின் ஆழப்பகுதியில் உள்ள கட்டிகளை அகற்றும் 'எக்ஸ்டெண்டட் எண்டோஸ்கோபிக் ஸ்கல் பேஸ் சர்ஜரி' முறையால் நோயாளிகள் விரைவில் குணமடைந்து வீடு திரும்ப முடிகிறது. இத்தகைய மேம்பட்ட நுட்பங்களை இளம் மருத்துவர்களுக்கு கற்பிப்பதில் இந்த மாநாடு முக்கிய பங்காற்றும்,"என்றார்.

2017 முதல் தென் தமிழகத்தில் இந்நவீன சிகிச்சை முறையை வெற்றிகரமாக மேற்கொண்டு வரும் மீனாட்சி மருத்துவமனை, கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக பிட்யூட்டரி சுரப்பி உள்ளிட்ட மூளை கட்டிகளுக்கான அறுவை சிகிச்சைகளை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. 'மீனாட்சி நியூரோஎண்டோகான் 2026' மாநாடு, மருத்துவர்களுக்கான உயர்தர கல்வி தளமாக அமைந்து, நோயாளிகளுக்கான சிகிச்சை தரத்தை மேலும் உயர்த்தும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.



## பூண்டி அருகேமெய்யூர் கிராமத்தில்மகா சிவராத்திரி முன்னிட்டு மசான கொள்ளை திருவிழா

திருவள்ளூர், பிப்.19-

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஒன்றியம் மெய்யூர் கிராமத்தில் அருள் பாவித்து வரும் ஸ்ரீ அங்காள ஈஸ்வரி அம்மன் ஆலயத்தின் சார்பில் மகா சிவராத்திரியை முன்னிட்டு மசான கொள்ளை திருவிழா 15.02.2026 அன்று ஞாயிற்றுக்கிழமை 06:00 மணி அளவில் மிக விமர்சியாக நடைபெற்றது. இவ்விழாவை கிராமபொதுமக்கள் முன்னின்று நடத்தினார்கள் ஸ்ரீ அங்காள அம்மன் திருவுருவ படத்தைவாகனத்தில் அலங்கரித்துசிறப்பு பூஜைகள் செய்து வான வேடிக்கை பட்டாசுவெடித்து மேளதாளங்கள் முழங்க கிராமத்தை வீதிவுலா வந்து வழிபட்டனர் கிராமத்தை சேர்ந்த பக்தர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தி சிறப்பு வழிபாடுகள் செய்து சாமி தரிசனம் செய்தனர் இவ்விழாவை கோவில் பூசாரிகளான வெங்கடேசன் கோகிலா மற்றும் சாமுவேல் புஷ்பா ரஜினி ஊத்துக்கோட்டை டாக்டர் அம்பேத்கர் நகர் செல்வம் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர்



■ நேற்று தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தில், கிருஷ்ணகிரிருராயக்கோட்டை சாலையை இருவழியிலிருந்து நான்கு வழியாக மாற்ற கோரிக்கை வைக்கப்பட்டது. பாரதியார் நகர் முதல் சோக்காடி வழியாக KRP Dam வரை உள்ள 10 கி.மீ ஒருவழிச் சாலையையும் அகலப்படுத்த வேண்டுமென கேள்வி எழுப்பப்பட்டது. இந்த கேள்வியை கிருஷ்ணகிரி எம்எல்ஏ கே. அசோக் குமார் முன்வைத்தார். இதற்கு அமைச்சர் எ.வ. வேலு மக்கள் நெருக்கடி அதிகம் உறுதியானால் அடுத்த நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் என பதிலளித்தார்.



■ கிருஷ்ணகிரி உதவி ஆணையர் அலுவலகத்தில், கிருஷ்ணகிரி வருவாய் மாவட்ட எல்லைக்குட்பட்ட சமய அறநிறுவனங்களுக்கு பரம்பரை முறை வழிசாரா அறங்காவலர்களாக நியமனம் செய்யப்பட்ட மாவட்டக் குழு தலைவர் திரு.ரஜினிசெல்வம் மற்றும் நான்கு உறுப்பினர்கள் கிருஷ்ணகிரி உதவி ஆணையர் / மாவட்டக் குழு அமைப்பாளர் திரு.ராமுவேல் அவர்கள் முன்னிலையில் 16.02.2026 அன்று பதவி ஏற்றுக்கொண்டனர்.



## கோட்டூர் கிராமத்தில் பர்கூர் அரசு மகளிர் கல்லூரி சார்பில் நாட்டு நலப்பணித் திட்ட முகாம்

கிருஷ்ணகிரி, பிப்.19-

கிருஷ்ணகிரி மாவட்டம் கோட்டூர் கிராமத்தில் பர்கூர் அரசு மகளிர் கல்லூரி சார்பில் நாட்டு நலப்பணித் திட்ட முகாம் நடந்தது.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியில் கல்லூரி சார்பில் நேற்று முதல் வருகிற 23ம் தேதி வரை, பர்கூர் அருகில் உள்ள கோட்டூர் கிராமத்தில் நாட்டு நலப்பணி திட்டத்தில் சிறப்பு முகாம் நடக்கிறது. இதில் அலகு 1ல் 50 மாணவியரும், அலகு 2ல் 50 மாணவியரும் என மொத்தம் 100 மாணவிகள் கலந்து கொண்டுள்ளனர். நேற்று நடந்த துவக்க விழாவிற்கு கல்லூரி முதல்வர் காயத்ரிதேவி தலைமை வகித்தார். அலகு 1ன் திட்ட அலுவலர் கணினி அறிவியல் துறைத் தலைவர் வித்யா துளசிராமன் வரவேற்றார். முன்னாள் ஊராட்சி தலைவர் ஜெயவேல், சுமதி ஜெயவேல், ஊர்நாயுடுகள் கோவிந்தன், ரேணுகாந்த் ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர். சிறப்பு விருந்தினராக பர்கூர் அரிமா வெங்கடேசன், அரிமா கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில், மாவட்ட வேளாண் அலுவலர் (ஓய்வு) பச்சையப்பன் கலந்து கொண்டு பேசுகையில், நாட்டு நலப்பணி திட்டத்தில் பணியாற்றி போது மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை வளரும். எனவே இந்த கிராம மக்களை சந்தித்து அவர்களுக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்ய வேண்டும். நான் படித்த காலத்தில் பெண் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பமாட்டார்கள். ஆனால் கடந்த டி.என்.பி.எஸ்.சி., நேர்முகத் தேர்வில் 97 பெண்கள் கலந்து கொண்டனர். இது பெருமையான விஷயம். இந்த கிராம மக்களின் வாழ்வாதாரம், வருமானம், ஆடு, மாடு வளர்ப்பு, விவசாய நிலங்கள் என அனைத்து விஷயங்ளையும் நீங்கள் ஆய்வு செய்து தெரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

பின்னர் மாணவியருக்கு மரக்கன்றுகளை வழங்கினார். மாணவிகள் மரக்கன்றுகளை கிராமத்தில் நட்டு வைத்தனர். இரண்டாம் பிரிவில், கணினி பயன்பாட்டியல் துறைத் தலைவர் அமுத பிரபா, சுகாதாரம் மற்றும் தனிநபர் சுத்தம் என்ற தலைப்பில் உரையாற்றினார். எஸ்.ஐ., சந்திரா, இன்றைய சமுதாயத்தில் மாணவிகள் தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும், பெண்களுக்கு கல்வி ஏன் அவசியம் என்பது குறித்தும் எடுத்துரைத்தார். அலகு 2 திட்ட அலுவலர் சித்ரா நன்றி கூறினார்.

## அஸ்தினாபுரத்தில் சிவராத்திரி முன்னிட்டு பிரம்ம குமாரிகள் அமைப்பின் கிளையில் 90-வது சிவ ஜெயந்தி சிவனும் நானும் என்ற தலைப்பில் கொண்டாடப்பட்டது

பல்லாவரம், பிப்.19-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அருகே பிரம்ம குமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக்கழகம் (Brahma Kumaris) என்பது 1937ல் தாதா லேக்ராஜ் அவர்களால் (பிரம்மா பாபா) தொடங்கப்பட்ட, பெண்களை முன்னிலைப் படுத்தும் ஒரு சர்வதேச ஆன்மீக இயக்கம். இது ராஜ யோக தியானம், ஆத்ம ஞானம் மற்றும் மனித மதிப்புகளைப் போதிப்பதன் மூலம் அமைதியான மற்றும் தூய்மையான உலகத்தை உருவாக் குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 110 க்கும் மேற்பட்ட நாடுகளில் கிளைகளைக் கொண்ட இது, ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரம் பெற்ற அரசு சாரா அமைப்பாகச் செயல் படுகிறது இதன் தலைமையகம் ராஜஸ்தானில் உள்ள




மவுண்ட் அபு வில் உள்ளது தமிழகத்தின் தலைமையகம் அண்ணா நகரிலும் கேகே நகரிலும் உள்ளது அதேபோல் பிரம்ம குமாரிகள் அமைப்பின் கிளை அஸ்தினாபுரத்தில் நேரு நகரில் உள்ளது மகா சிவராத்திரியை முன்னிட்டு அஸ்தினாபுரத்தில் உள்ள பிரம்ம குமாரிகள் ராஜயோக தியான நிலையத்தில் 90 ஆவது சிவ ஜெயந்தி சிவனும் நானும் என்ற தலைப்பில் மகா சிவராத்திரி அன்று பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அவர்களால் திறக்கப்பட்டது இதில் 35வது மாமன்ற உறுப்பினர் சந்திரன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் அருண் கண்ணன், பிரம்ம குமாரிகள் அமைப்பை சேர்ந்த சகோதரி ரங்க நாயகி மற்றும் சகோதர சகோதரிகள் கலந்து கொண்டனர்



# பர்கூர் சட்டமன்ற தொகுதியில் ரூ.80.37 லட்சம் மதிப்பீட்டில் திட்டப்பணிகள் மதியழகன் எம்எல்ஏ., துவக்கி வைத்தார்

கிருஷ்ணகிரி, பிப்.19-

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதியில் ரூ.80.37 லட்சம் மதிப்பீட்டில் திட்டப்பணிகளை மதியழகன் எம்எல்ஏ., துவக்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதி உட்பட்ட பர்கூர் மத்திய ஒன்றியம் கந்திகுப்பம் ஊராட்சி அம்பேத்கர் நகர் பகுதியில் ரூ.31.25 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயகூடம், ரூ.15.84 லட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்தேக்கதொட்டி, ரூ.4.40 லட்சம் மதிப்பீட்டில் வெயிட்டிங் செட், ரூ.4.13 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலை, ரூ.6.58 லட்சம் மதிப்பீட்டில் பள்ளி சுற்றுசுவர், ரூ.2.93 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை, ரூ.7.18 லட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் கால்வாய் என மொத்த ரூ.80.37 லட்சம் மதிப்பீட்டில் நடைபெறவுள்ள திட்டப்பணிகளுக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்எல்ஏ., பூமி பூஜை செய்து தொடங்கி வைத்து, அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் காந்தி, ராஜேந்திரன், கவுன்சிலர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், கிளை செயலாளர்கள், கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இந்திய வேளாண் ஆராய்ச்சி குடும்பத்தின் குளிர்கால பள்ளி பயிற்சி



பெரியகுளம், பிப்.19-

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் உள்ள தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இந்திய வேளாண் ஆராய்ச்சி குடும்பத்தின் (ICAR) 21 நாட்கள் குளிர் கால பள்ளி நடைபெற்றது. இது ICAR நிதி உதவி உடன் (6.56.. லட்சம் நடத்தப்படது இக்கல்லூரியில் இயற்கை வள மேலாண்மை துறை தலைவர் பேராசிரியர் முனிவர் G. J. ஜானவி இப் பள்ளிக்கு பயிற்சி இயக்குனராக இருந்து நடத்தினார். தோட்டக்கலை பயிர்கள் விலை பொருள்களின் வாழ்நாளை அதிகரிக்க கூடிய மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை பயிற்றுவித்தல் இப்பள்ளியின் கருப்பொருள் ஆகும். இந்தப் பயிற்சியில் சிக்கிம், மகாராஷ்டிரா, ஒடிசா, ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இருந்து விஞ்ஞானிகள் இப்ப பயிற்சி பள்ளியில் பங்கேற்றனர். இப்பயிற்சி தொடக்க விழாவில் பேராசிரியர் ஜி ஜோ.ஜானவி அனைவரையும் வரவேற்று தொடக்க விழா துறை தலைவர் வாழ்த்துரை வழங்கினார். இப்பள்ளி தொடக்க விழா சிறப்பு விருந்தினராக கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள CSiR -nllst தேசிய பல்துறை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு நிலையத்தின் இயக்குனர் முனிவர் சி.ஆனந்த ராமகிருஷ்ணன் இந்திய ஜனாதிபதிடமிருந்து 2024 ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய அறிவியல் விருது ஆன ராஷ்டிய விஞ்ஞான சி புரஸ்கார் பெற்றவர். தலைமை உரை கல்லூரி முதல்வர் முனிவர் எஸ் சரஸ்வதி இப்பயிற்சி பள்ளி அறுவடைக்குப் பின்னர் இழப்புக்களை குறைப்பதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதை வலியுறுத்தி உரையாற்றினார். இந்த குளிர்கால பயிற்சி பள்ளியின் நிறைவிழாவினை 21 நாட்கள்.. குளிர்கால பள்ளி கல்லூரியில் முதல் முறை நடத்தப்பட்டதாக பெருமையுடன் தெரிவித்து பாராட்டி இதற்கு நிதி உதவி அளித்த ஐ சி ஏ ஆர் க்கு தனது நன்றியையும் தெரிவித்துக் கொண்டார். விழா சிறப்பு விருந்தினர் உதவ இயக்குனர் ஜெனரல் முனிவர் சீமா ஜக்கி இணைய வழிகள் இணைந்து குளிர்கால பள்ளியில் பங்கேற்ற அனைத்து விஞ்ஞானிகளையும் பாராட்டி அவர்களை கருத்து கேட்டறிந்தார்.. மேலும் மேம்படுத்தப்பட்ட மேலாண்மை உத்திகளை கண்கூடாக தேனி திண்டுக்கல் மதுரை திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள உணவு பாதுகாப்பு மற்றும் பதப்படுத்துதல் நிலையங்களில் பார்த்து கற்றுக் கொண்டதால் பங்கேற்ற விஞ்ஞானிகள் கல்லூரியில் உள்ள மாணவர்களுக்கு விளக்கி கூறி பாடம் கற்பிக்க எளிதாக இருக்கும் என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

இந்த நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் முனிவர் ஆர் பியுலா பேராசிரியர்.. - மற்றும் தலைவர் அறுவடைக்கு பின்னர் தொழில்நுட்பத் துறை நன்றி உரை வழங்கினார்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் தெற்கு பகுதி 61வது வட்டம் திமுக சார்பில் வட்ட அவைத்தலைவர் கே.இரவி அவர்கள் தலைமையில், வட்ட செயலாளர் ஆர்.மஞ்சுநாதன் அவர்கள் வரவேற்புரையில், கழக தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் சிறப்புரையாற்றி பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர், 4வது மண்டல குழு தலைவர், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ், 5வது மண்டல குழு தலைவர், தாம்பரம் மேற்கு பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.எஸ். சங்கர், மாமன்ற உறுப்பினர் ஹேமாவதி சேகர் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் அனைவரும்



■ கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி மணி மஹாலில், வேளாண்மைத்துறை சார்பாக நடைபெற்ற மாவட்ட அளவிலான சிறுதானிய திருவிழா மற்றும் வேளாண் கண்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் துவக்கி வைத்து, சிறுதானிய சாகுபடி மற்றும் மதிப்புக்கூட்டுதல் தொழில்நுட்பக் கையேடுகளை வெளியிட்டார். உடன், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் காளிமுத்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஏஞ்சலின் பொன்ராணி, துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) மோகன், துணை இயக்குநர் (வேளாண்மை) கலா, உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# கிருஷ்ணகிரி அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் மயான கொள்ளைத் திருவிழா 50 ஆயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் பங்கேற்பு



கிருஷ்ணகிரி, பிப்.19-

கிருஷ்ணகிரி அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் மயான கொள்ளைத் திருவிழாவில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரி பழைய பேட்டை அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலில், மயான கொள்ளைத் திருவிழா கடந்த 15ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. தொடர்ந்து நேற்று முன்தினம் மகா சிவராத்திரி விழாவும் நேற்று மயான கொள்ளைத் திருவிழாவும் நடந்தது. இதையொட்டி நேற்று அதிகாலை 3 மணிக்கு முகவெட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லும் நிகழ்ச்சியும், 5 மணிக்கு அம்மனுக்கு அபிஷேகமும், சிறப்பு அலங்காரமும் நடந்தது. தொடர்ந்து பக்தர்கள் அலகு குத்தியும், உடலில் எலுமிச்சைப் பழங்களைக் குத்திக்கொண்டும் ஊர்வலமாக சென்றனர். சிறுவர்கள் முதல் பெரிய வர்கள் வரை நூற்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் காளி வேடம் அணிந்து நேர்த்திக் கடன் செலுத்தினர். மயானத்தில் பூசாரிகளிடம் பக்தர்கள் சாட்டையடி வாங்கினர்.

மதியம், அலங்கரிக்கப்பட்ட தேரில் பூத வாகனத்தில் அமர்ந்து அம்மன் மயான கொள்ளைக்கு புறப்பட்டு சென்றார். வழியில் பொதுமக்கள், உப்பு மற்றும் மிளகை தேர்மீது தூவி தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தினர். பின்னர் இடுகாட்டில் வைக்கப்பட்டிருந்த எலும்புகளை காளி வேடம் அணிந்து சென்ற பக்தர்கள் வாயால் கவ்வி எடுத்தனர்.

இந்த விழாவில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர். விழாவையொட்டி போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. இதில், பொதுமக்கள் நீர்மோர், அன்னதானம், தண்ணீர் போன்றவற்றை பக்தர்களுக்கு வழங்கினர்.

# அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு எதிராக தேவேந்திர குல வேளாளர் மக்கள் கண்டனம்




இராமநாதபுரம். பிப்.19-

இராமநாதபுரம் மாவட்டம், தேவேந்திர குல வேளாளர் சமூகத்தினரின் அடையாளம் மற்றும் உரிமைகள் குறித்து சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்ததாக கூறி, அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் மீது சமூகத்தினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். தேவேந்திர குல வேளாளர் சமூகத்தையும், அந்த சமுதாயத்தைச் சேர்ந்த கட்சி தலைவர் ஜான் பாண்டியன் குறித்து இழிவாக பேசியதாக குற்றச்சாட்டை முன்வைத்து, பல்வேறு பகுதிகளில் இருந்து எதிர்ப்பு எழுப்பியுள்ளனர்.

இந்த விவகாரம் முதுகுளத்தூர் மற்றும் பரமக்குடி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி, பொதுமக்கள் மற்றும் அர சியல் வட்டாரங்களில் பேசுபொருளாக மாறியுள்ளது. 2022 ஆம் ஆண்டு முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் BDO வாக பணியாற்றி வந்தவரிடம் ஜாதி ரீதியாக அமைச்சர் ராஜ கண்ணப்பன் பேசியதாக அப்போது குற்றச்சாட்டு எழுந்த நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக தேவேந்திர குல வேளாளர் சமூக மக்கள், சமூக அமைப்புகள்மற்றும்பல்வேறு அரசியல் அமைப்புகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டன.இதனை தொடர்ந்து அமைச்சர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணியிட மாற்றம் செய்யப்பட்டிருந்தது. மீ மீண்டும் தற்போதும் ஒடுக்கப் பட்ட சாதி என்று தேவேந்திர குல வேளா ளர் சமூக மக்களை குறிப் பிட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனைய டுத்து, வருகின்ற சட்ட தேர்தலில் மன்றத் அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு தகுந்த பாடம் புகட்டுவோம் என சமூகத்தினர். கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து பரமக்குடி சுரேஷ் தேவேந்திரகுல வேளாளர் கல்வி குழு தலைவர் கூறியதாவது, தேவேந்திர குல வேளாளர் சமூகத்தின் அடையாளத்தை இழிவுபடுத்தும் வகையில் தொடர்ந்து கருத்துகள் தெரிவிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. சமூகத்தின் மரியாதை மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இதுபோன்ற செயல்கள் மீண்டும் நிகழ்ந்தால், ஜனநாயக ரீதியாக கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும், என்றார். தேவேந்திர குல வேளாளர் கல்வியாளர்கள் குழு தமிழ்நாடு சார்பில் வெளி யிடப்பட்ட கண்டன அறிக்கையில், சம்பவம். குறித்து உரிய நடவ டிக்கை எடுக்க வேண் டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது.

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பழங்குடியினர் உழவர் சங்கங்களுக்கு வேளாண் இயந்திரங்களுக்கான சாவிகள் மற்றும் கூடாரம் அமைப்பதற்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்



நீலகிரி, பிப்.19-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் மற்றும் மத்திய வேளாண் பொறியியல் நிறுவனம், பழங்குடியினர் நலத்துறை கோவை இணைந்து, தொல்குடி ஐந்திணை பழங்குடியினர் வாழ்வாதார திட்டத்தின் கீழ், மசினகுடி பூதநத்தம் பூர்வமலை பழங்குடியினர் உழவர் சங்கத்திற்கு, ரூ.50 இலட்சம் மதிப்பில் (ரூ.45 இலட்சம் மானியம்) வேளாண் இயந்திரங்களுக்கான சாவிகள் மற்றும் கூடாரம் அமைப்பதற்கான ஆணையினை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

பழங்குடியின உழவர்கள் தங்களது நிலங்களில் உழவு, விதைப்பு, நடவு, களை யெடுப்பு, மருந்து தெளிப்பு, உரமிடல், அறுவடை மற்றும் கதிரடிப்பு உள்ளிட்ட அறுவடைக்கு பின் சார் நேர்த்திகள் போன்ற அனைத்து பணிகளையும் விரைவாகவும், துல்லியமாகவும் உடல் களைப்பின்றியும் குறைந்த செலவிலும் செய்திட வகை செய்திடும் புதிய நோக்கத்தில் ஐந்திணை வேளாண்மை மேலாண்மை திட்டம் என்னும் பெயரில் கோயம்புத்தூர் மத்திய வேளாண்மைப் பொறியியல் நிறுவனத்தின் தொழில் நுட்ப வழிகாட்டுதலுடன் இணைந்து தமிழ்நாடு அரசு பழங்குடியினர் நலத்துறையின் முன்னோடி திட்டமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் சேலம், திருச்சி, உள்ளிட்ட மாவட்டங்களில் இதுவரை 13 பழங்குடியினர் கிராமங்களில் பழங்குடியினர் உழவர்கள் சங்கங்கள் தலைமையில் 13 வேளாண் கருவி வாடகை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், ரூ.50 இலட்சத்தில் ரூ.45 இலட்சம் மானியத்திலும், ரூ.5 இலட்சம் சங்கத்தின் பங்களிப்புடனும், ஒவ்வொரு வாடகை மையத்திற்கும் சுமார் ரூ.25 இலட்சம் மதிப்பிலான கருவிகளும், ரூ.25 இலட்சம் மதிப்பில் நிரந்தர கூடாரமும் அமைக்கப்பெற்று, அந்தந்த உழவர் சங்கங்களிடம் நிரந்தரமாக ஒப்படைக்கப்பட்டு, சங்கத்தின் உறுப்பினர்களும் மற்ற உழவர்களும் குறைந்த வாடகை அடிப்படையில் அக்கருவிகளை பெற்று வேளாண்மை பணிகளை நல்ல முறையில் செய்து முடிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் மசினகுடி பூதநத்தம் பூர்வமலை பழங்குடியின உழவர் சங்கத்திற்கு டிராக்டர், சுழல் கலப்பை, கொத்து, கலப்பை, வட்ட கலப்பை டிப்பிங் ட்ரைலர், களையெடுக்கும் இயந்திரம் மின் கலப்பான் என மொத்தம் 13 வகை கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சங்கத்திலும் குறைந்தது 200 உறுப்பினர்களை கொண்டிருப்பது இத்திட்டத்தின் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், இத்திட்டத்தின் மூலம் சுமார் 4,200 பழங்குடியின உழவர் குடும்பங்கள் பயன் பெறுவார்கள். இத்திட்டம் பழங்குடி உழவர்களுக்கான ஒரு முன்மாதிரி வேளாண் இயந்திர மயமாக்கல் திட்டம் ஆகும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.



# பொன்னேரியில் பாஜக பட்டியல் அணி மற்றும் ஜனநாயக முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் திமுகவை கண்டித்து கண்டன ஆற்பாட்டம்

திருவள்ளூர், பிப்.19-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பாரதிய ஜனதா கட்சி பட்டியல் அணி மற்றும் ஜனநாயக முற்போக்கு கூட்டணி சார்பில் பட்டியல் சமூக மக்களுக்கு தமிழக அரசு ஏற்படுத்திய அநீதியை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 18.02.2025 அன்று காலை 10 மணி அளவில் பொன்னேரி ஆர்.டி.ஓ. அலுவலகம் எதிரில் பட்டியல் அணி மாவட்ட தலைவர் இளங்கோவன் மற்றும் ஒபிசிஅணி மாவட்டதலைர் ஆனந்தன் மற்றும் கிழக்கு மாவட்ட தலைவர் S.சுந்திரம் அதிமுக மாவட்ட செயலாளர் சிறுனீயம் பலராமன் மாநிலசெயற்குழு உறுப்பினர் V.ராஜேஷ் தலைமையில் நடைபெற்றது

மேலும் பாஜக மாவட்ட செயலாளர்கள் சந்துரு (ஜே.பி.எ) M.ஜெயபிரகாஷ் மாறிமுத்து பொதுச்செயவாளர்கள் K.G.M.சுப்பிரமணி அன்பாலயா சிவக்குமார் ஊடகபிரிவு மாவட்ட தலைவர் இளையா சமூக ஊடகபிரிவு தலைவர் நடராஜ் முன்னிலை வகித்தனர் ஜனநாயக முற்போக்கு கூட்டணி கட்சிகளை சேர்ந்த மாவட்ட ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டு திமுக அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பி கண்டன ஆற்பாட்டத்தில் ஈடுபட்டனர்




# ஊராட்சி ஒன்றிய பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்க விழா

சிவகங்கை, பிப்.19-
சிவகங்கை மாவட்டம் கல்லல் ஊராட்சியில் உள்ள குருந்தம்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக அறிவியல் விழா கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலாளரும், கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியருமான பிரபு கலந்து கொண்டார். அறிவியல் அறிஞரான தாமஸ் ஆல்வா எடிசனின் கண்டுபிடிப்புகளைப் பற்றியும், இயற்கைத் தேர்வுக் கோட்பாட்டை வெளியிட்ட சார்லஸ் டார்வின் பற்றியும், கலிலியோவின் ஆராய்ச்சிப் பற்றியும், சர் சி வி ராமனின் ராமன் விளைவையும் எடுத்துரைத்தார். ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் பிப்ரவரி 28 அன்று தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்படும் முக்கியத்துவத்தைப் பற்றியும் விளக்கி கூறிய அவர் அறிவியல் இயக்கப் பாடல்களையும் பாடினார். ஆறாம் வகுப்பு யாஷ்விதா சுனிதா வில்லியம்ஸ் பற்றி கூறியும், ஆறாம் வகுப்பு மோனிகா துளிர் இதழில் வந்த தகவல்களைத் தொகுத்தும், ஆறாம் வகுப்பு மாணவர் நிகிலேஷ் விஞ்ஞானம் பற்றிய கவிதையைக் கூறி எடிசன் படம் வரைந்தும், ஆறாம் வகுப்பு மாணவர் சகிந்த் எடிசன் பற்றிய கவிதையும், படம் வரைந்தும் இந்நிகழ்ச்சியில் உற்சாகமாக கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் விஞ்ஞான துளிர் மற்றும் விஞ்ஞான சிறகு அறிவியல் இதழ்கள் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் தொடக்கமாக பள்ளி தலைமை ஆசிரியை மனோன்மணி வரவேற்புரையாற்றினார். ஆங்கில ஆசிரியை பத்மஜா, கணித ஆசிரியர் அண்ணாத்துரை வாழ்த்துரை வழங்கினர். ஆசிரியை சித்ராதேவி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நன்றியுரையாற்றினார். ஆசிரியர்களும், நூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகளும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். அன்றைய தினம் பள்ளியை பார்வையிட வந்த சிவகங்கை மாவட்ட ஆட்சியர் பொற்கொடி பின்னக் கூட்டல் குறித்த கேள்விகளுக்கு சரியாக விடையளித்த ஆறாம் வகுப்பு மாணவர்கள் சகிந்த், கௌசிகா உள்ளிட்டோரையும், கணித ஆசிரியை சித்ரா தேவியையும் பாராட்டினார்.

# ரயில் பயணம்: போர்டிங் ஸ்டேஷனில் ஏறாவிட்டால் பணம் திரும்பக் கிடைக்காது புதிய விதி அமல்

மானாமதுரை, பிப்.19-
ரயில் பயணிகள் தங்களது முன்பதிவு செய்யப்பட்ட டிக்கெட்டில் குறிப்பிட்டுள்ள 'போர்டிங்' (Boarding) நிலையத்தில் ரயிலில் ஏறத் தவறினால், அந்த டிக்கெட் தானாகவே ரத்து செய்யப்பட்டு வேறொருவருக்கு ஒதுக்கப்படும் என்ற புதிய நடைமுறையை இந்திய ரயில்வே அமலுக்குக் கொண்டு வந்துள்ளது.

முக்கிய மாற்றங்கள்:
உடனடி ரத்து: பயணி குறிப்பிட்ட ஸ்டேஷனில் ரயிலில் ஏறவில்லை என்றால், அவரது இருக்கை உடனடியாக காலியாக இருப்பதாக அறிவிக்கப்படும். அந்த இருக்கை காத்திருப்போர் பட்டியலில் (Waiting List) உள்ள பயணிகளுக்கு உடனுக்குடன் ஒதுக்கப்படும்.

தொழில்நுட்ப வசதி: தற்போது அனைத்து ரயில்களிலும் டிக்கெட் பரிசோதகர்களுக்கு (TTE) 'ஹேண்ட் ஹெல்டு டெர்மினல்' (Handheld Terminal) எனப்படும் கையடக்கக் கணினி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு பயணி வரவில்லை என்பதை டிடிஇ உடனடியாக கணினியில் பதிவேற்றுவார். இதனால் சில நிமிடங்களிலேயே ஆன்லைன் மூலம் அடுத்த வருக்கு அந்த இருக்கை வழங்கப்பட்டுவிடும்.

பணம் கிடையாது: ரயிலில் ஏறாத பயணிகளுக்கு டிக்கெட் கட்டணம் திரும்ப வழங்கப்பட மாட்டாது என்பதும், இது குறித்த குறுஞ்செய்தி அவர்களது மொபைல் எண்ணிற்கு அனுப்பப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பழைய விதிமுறை என்ன?
முந்தைய விதிகளின்படி, ஒரு பயணி வராத பட்சத்தில் அடுத்த இரண்டு ரயில் நிலையங்கள் அல்லது ஒரு மணி நேரம் வரை டிக்கெட் பரிசோதகர் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால், தற்போது இந்த கால அவகாசம் நீக்கப்பட்டு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

பயணிகளுக்கான அறிவுறுத்தல்:
பயணிகள் தாங்கள் முன்பதிவு செய்த ஸ்டேஷனுக்குப் பதிலாக வேறு ஸ்டேஷனில் ஏற விரும்பினால், ரயில் புறப்படுவதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பே ஆன்லைன் மூலமாகவோ அல்லது கவுண்ட்டர்களிலோ தங்களது 'போர்டிங் பாயிண்டை' மாற்றிக் கொள்ள வேண்டும் என ரயில்வே நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த புதிய நடைமுறையினால் ரயில்களில் காலியாக இருக்கும் இருக்கைகள் தகுதியுள்ள பயணிகளுக்கு வெளிப்படையான முறையில் உடனடியாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் போதைப்பொருள் வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 1229.813 கிலோ கிராம் கஞ்சா அழிப்பு

திண்டுக்கல், பிப்.19-
திண்டுக்கல் மாவட்டத்தில் போதைப் பொருள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட 198 வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட 896.484 கிலோ கிராம் கஞ்சா திண்டுக்கல் மாவட்ட ஆயுதப்படையில் அமைந்துள்ள மல்கானாவில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது. அதேபோல தேனி மாவட்டத்தில் போதைப் பொருள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட 92 வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட 333.329 கிலோ கிராம் கஞ்சா தேனி மாவட்ட ஆயுதப்படையில் அமைந்துள்ள மல்கோனாவில் பாதுகா ப்பாக வைக்கப்பட்டிருந்தது. திண்டுக்கல் மாவட்டத்தில் கைப்பற் றப்பட்ட 896.484 கிலோ கிராம் மற்றும் தேனி மாவட்டத்தில் கைப்பற்றப்பட்ட 333.329 கிலோ கிராம் கஞ்சா ஆக மொத்தம் 1229.813 கிலோ கிராம் கஞ்சாவினை அரசு வழிகாட்டு விதிகளின்படியும் மற்றும் காவல்துறை இயக்குநர் அவர்களின் அறிவுறுத்தலின் படியும் திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி தாலுகா பெருமாள்புரத்தில் அமைந்துள்ள Aseptic Systems Bio Medical Wastage Management நிறுவனத்தில் காவல்துறை துணைத்தலைவர், திண்டுக்கல் சரகம், காவல் கண்காணிப்பாளர், திண்டுக்கல் மாவட்டம், உதவி இயக்குநர், MFSL திண்டுக்கல், திண்டுக்கல் நகர் உட்கோட்ட காவல் துணைக்கண்காணிப்பாளர் மற்றும் தேனி மதுவிலக்கு காவல் துணைக்கண் காணிப்பாளர் ஆகியோர் முன்னிலையில் அழிக்கப் பட்டது.




# அரசு கல்லூரி கௌரவ விரிவுரையாளர்களின் வாழ்வாதார கோரிக்கைகள்: நிலக்கோட்டையில் வலுக்கும் குரல்

நிலக்கோட்டை, பிப்.19-
திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணியாற்றும் கௌரவ விரிவுரையாளர்கள், தங்களின் பணிப்பாதுகாப்பு மற்றும் ஊதிய உயர்வு தொடர்பான ஐந்து முக்கிய கோரிக்கைகளை அரசுக்கு முன்வைத்துள்ளனர்.



மாணவர்களின் உயர்கல்விக்கு முக்கிய பங்காற்றும் தங்களுக்கு, சமூகப் பாதுகாப்புடன் கூடிய வாழ்வாதாரத்தை உறுதி செய்ய வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

முக்கிய கோரிக்கைகள்:
* யுஜிசி நிர்ணயித்த ஊதியம்: பல்கலைக்கழக மானியக்குழு (UGC) பரிந்துரைத்துள்ளபடி, கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 57,800 ரூபாய் ஊதியத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.
* 12 மாத கால ஊதியம்: முன்பு அரசு உதவிபெறும் உறுப்புக் கல்லூரிகளில் பணியாற்றிய கௌரவ விரிவுரையாளர்களுக்கு 12 மாத கால ஊதியம் வழங்கப்பட்டது. அதே நடைமுறையை அனைத்து அரசு கல்லூரிகளிலும் பணியாற்றும் விரிவுரையாளர்களுக்கும் விரிவுபடுத்தி, ஆண்டு முழுவதும் தடையற்ற ஊதியம் வழங்க வேண்டும்.
* வருங்கால வைப்பு நிதி (PF & EF): உறுப்புக் கல்லூரி விரிவுரையாளர்களுக்குப் பிடிக்கப்பட்டதைப் போலவே, அனைத்து அரசு கல்லூரி கௌரவ விரிவுரையாளர்களுக்கும் வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.
* மகப்பேறு விடுப்பு: பெண் விரிவுரையாளர்களின் நலன் கருதி, ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு உரிமையை வழங்க வேண்டும்.
* பணிக்கொடை (Gratuity): நீண்ட காலம் பணியாற்றி ஓய்வுபெறும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு, அவர்களின் பணி மூப்பைக் கருத்தில் கொண்டு 25 இலட்சம் ரூபாய் பணிக்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

குறிப்பு: இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே தங்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்றும், இது குறித்து தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நிலக்கோட்டை அரசு மகளிர் கல்லூரி விரிவுரையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# பச்சைமலை அத்திரி ஈஸ்வரர் திருக்கோயிலில் மகா சிவராத்திரி முன்னிட்டு பக்தர்களுக்கு சிவபெருமானிடம் பூஜை செய்த ருத்திராட்சம் வழங்கபட்டது

தாம்பரம், பிப்.19-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம்சானடோரியம் பகுதியில் உள்ள பழமை வாய்ந்த அர்த்திரிஈஸ்வரர் திருக்கோயிலில் மகாசிவராத்திரி முன்னிட்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு விடிய விடிய 6 கால பூஜை செய்து சுவாமி தரிசனம் செய்த நிலையில் இந்து திராவிட மக்கள் கட்சியின் நிறுவனர் தேசிய தலைவர் ரமேஷ்பாபுஜி தனது நிர்வாக்களுடன் பக்தர்களுக்கு ருத்ராட்சம் வழங்கினார். மகாசிவாரத்திரி முன்னிட்டு சிவனடியார்கள், சிவாச்சாரியர்கள் உட்பட ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து அன்னதானம் பெற்று சென்றனர்.

# "தமிழக பட்ஜெட்: சமூகநலத் திட்டங்கள் வரவேற்பு; ஓய்வூதியத் திட்ட அறிவிப்பு இல்லாதது ஏமாற்றம் வருவாய்த்துறை அலுவலர் சங்கம் கருத்து"

சிவகங்கை, பிப்.19-
தமிழக பட்ஜெட் குறித்து தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில துணைத் தலைவர் அ. தமிழரசன் தெரிவித்துள்ள கருத்துகள் பின்வருமாறு:



பட்ஜெட் குறித்த பார்வை
தமிழக அரசு கடந்த 5 ஆண்டுகளில் செயல்படுத்திய திட்டங்களின் தொகுப்பாக இந்த பட்ஜெட் அமைந்துள்ளது. மற்ற மாநிலங்களை விட கல்வி மற்றும் சமூகநலத் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. அதேபோல் தொழில் மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

நிதி நிலைமை
வருவாய் பற்றாக்குறை: 69,219 கோடி
அரசின் கடன்: 10.62 லட்சம் கோடி
இந்த கடன் சுமை அதிகரித்திருப்பது கவலை அளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முக்கிய கோரிக்கைகள் மற்றும் ஏமாற்றம்
பட்ஜெட்டில் சில முக்கிய அறிவிப்புகள் இடம்பெறாதது ஏமாற்றம் அளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்:
புதிய ஓய்வூதியத் திட்டம்: உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்கான (UPS/OPS தொடர்பான கோரிக்கைகள்) விதிமுறைகள் வெளியிடப்படாதது பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. இதை பொதுத் தேர்தல் அறிவிப்புக்கு முன்பே வெளியிட வேண்டும்.
பணியாளர் நலன்: கிராம உதவியாளர்கள், சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களுக்குக் காலமுறை ஊதியம் குறித்த அறிவிப்பு இல்லை.
பகுதிநேர ஆசிரியர்கள்: இவர்களைப் பணி நிரந்தரம் செய்வது போன்ற அறிவிப்புகள் இடம்பெற்றிருந்தால் இது ஒரு சிறந்த பட்ஜெட்டாக இருந்திருக்கும் என்று தனது கருத்தை தெரிவித்துள்ளார்.

# ஊரகப் பகுதிகளில் உள்ள 10,679 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள 1,14,012 உறுப்பினர்களில் 87,041 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது

மதுரை, பிப்.19-
ஊரகப் பகுதிகளில் உள்ள 10,679 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள 1,14,012 உறுப்பினர்களில் 87,041 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புறங்களில் உள்ள 9,818 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள 1,08,895 உறுப்பினர்களில் 1,00,875 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.



மகளிர் சுய உதவிக்குழுக்களின் அடையாள அட்டை பயன்கள்

1.அரசு போக்குவரத்துக்கழகம்:
மகளிர் சுயஉதவிக் குழுவினர் தங்களுடைய உற்பத்தி பொருட்களை கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு எடுத்துச் செல்லும் பொழுது 25 கிலோ வரை கட்டணமின்றி இலவசமாக எடுத்துச் செல்ல அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத்திட்டம்
முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் மகளிர் சுய உதவிக்குழு அட்டையைப் பயன்படுத்தி மகளிர் குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு எதிர்பாராத விபத்து மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள மருத்துவமனைகள் மூலம் செலவுத் தொகையினை காப்பீடு திட்டத்தில் பெற்றுக் கொள்ள அடையாள அட்டையைப் பயன்படுத்திட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3.கூட்டுறவுத்துறை
மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் தங்களது அடையாள அட்டையைப் பயன்படுத்தி, கூட்டுறவுத்துறை (Co-Optex) மூலம் கொள்முதல் செய்யப்படும் பொருட்களுக்கு ஏற்கனவே உள்ள தள்ளுபடிகள் போக கூடுதலாக 5மூ தள்ளுபடி வழங்க அரசாணையில் தெரிவிக்கப்படுள்ளது.

4.மாவட்ட முன்னோடி வங்கி
மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தங்களது அடையாள அடை;டையைப் பயன்படுத்தி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகப்புத்துறை, உற்பத்தி உறுதிமொழிக்கடன், ஆதரவற்ற பெண்களுக்கு கடன், வேளாண், மண்பாண்டம், நகைக்கடன், வீட்டுக்கடன், வீட்டு அடைமானக்கடன், பெண் தொழில் முனைவோர், பணிபுரியும் பெண்கள், சிறு வணிகக்கடன், சம்பளக் கடன், துறை அல்லாத கடன்கள், நிதிக்கடன், வாகனம், நுகர்வோர் போன்ற கடன்கள் பெற சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் தங்களது அடையாள அட்டையைப் பயன்படுத்திக் கொள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5.ஆவின்
அதிகப்படியான சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஆடு மற்றும் மாடு வளர்ப்புப் பணியில் ஈடுப்பட்டு வருகின்றனர். அவ்வாறு மேற்கொள்ளும் தொழிலில் கறவை மாடுகள் மூலம் பெறப்படும் பாலினை ஆவின் கூட்டுறவு சங்கத்திற்கு விற்பனை செய்கின்றனர். எனவே அடையாள அட்டையைப் பயன்படுத்தி ஆவின் நிறுவனத்தால் உற்பத்தி செய்து விற்கப்படும் பொருட்களில் கீழ்கண்டவாறு சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு தள்ளுபடி வழங்க அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. இ.சேவை மையங்கள்
இ.சேவை மையங்களில் மகளிர் குழு உறுப்பினர்கள் தங்களுக்கு தேவைப்படும் சான்றிதழ்கள் விண்ணப்பிக்கும் பொழுது அரசால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் 10மூ தள்ளுபடி பெற்றுக் கொள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

செய்தி வெளீயிடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161